ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1964/68 - 2016 අප්‍රේල් මස 29 වැනි සිකුරාදා - 2016.04.29

1964/68 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: BD/ST/LND/1/7/33.

காணி அமைச்சின் குறிப்புு இல.: 13/96/HW/184.

பொது தேவைக்கு தேவையான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் எண்ணியிருப்பதால் 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் அறியத்தருகிறேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணிகளின் விபரம்:**

ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் சொரணாத்தொட்ட பிரதேச செயலகப் பிரிவில் சொரணாத் தொட்ட கோரளையில் நாகொல்லகம கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் இறுதி கிராம வரைப்பட இல. 178, பிற் சேர்கை இல. 31 இல் காட்டப்பட்ட அளவில் 0.0868 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணித் துண்டு.

**அட்டவணை**

**1. துண்டு இலக்கம்: 721**
காணியின் பெயர்: கொஸ்கஹாகுபுர; விபரம்: வயல்; உரிமை தோருவோர்: அரசாங்கம்; விஸ்தீரணம்: 0.0538 ஹெக்டயார்.

**2. துண்டு இலக்கம்: 722**
காணியின் பெயர்: கொஸ்கஹாகுபுர; விபரம்: வீதி; உரிமை தோருவோர்: அரசாங்கம்; விஸ்தீரணம்: 0.0330 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 யூன் 29 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு சொரணாத்தொட்ட பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையும் கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016, யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் பயும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எச். எம். நந்தசேன,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
சொரணாத்தொட்ட,
2016, ஏப்பிறல் 27.

5 - 431